பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 21 சனிக்கிழமை 06.08.2022 கதிர் 163

## ஜனாதிபதி - ஜே.வி.பி. செவ்வாயன்று பேச்சு




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அநுர குமாரதிஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினருக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. ☞2

## போர்க்குற்றங்களில் ஈடுபட்ட

# இலங்கை இராணுவ அதிகாரிகளை கைதுசெய்ய நடவடிக்கை எடுங்கள்!



### ஐ.நா. உறுப்புரிமையிலுள்ள 47 நாடுகளிடம் மனித உரிமை ஆணையாளர் வேண்டுகோள்

**மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்ட இலங்கை இராணுவ அதிகாரிகள் 58 பேரைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் வலியுறுத்தியுள்ளார்.** ☞2

## ஜனாதிபதிக்கு ஐ.நா. வாழ்த்து



ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவுக்குவாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்நோக்கியுள்ள தற்போதையசவால்களைவெற்றி கொள்வதற்குச் சாதகமான சூழலையும் ஸ்திரத்தன்மையையும் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் மிகவும் முக்கியமானதாக அமையும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர், ☞2

## சிங்கப்பூரில் மேலும் 14 நாள்கள் தங்க அனுமதி கோரும் கோட்டா



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிங்கப்பூரில் மேலும் 14 நாள்கள் தங்கியிருப்பதற்கு அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது சிங்கப்பூரில் தங்கியுள்ள கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 11ஆம் திகதி நாடு திரும்புவார் என்று தெரிவிக்+கப்பட்டது.

எவ்வாறாயினும், அவர் ☞2

## 'யுவான் வாங் 5' வருகையை ஒத்திவைக்குக!

### சீனாவிடம் இலங்கை கோரிக்கை என்று இந்திய ஊடகம் தெரிவிப்பு



இரண்டு அரசுகளுக்கிடையில் மேலும் ஆலோசனைகள் மேற்கொள்ளப்படும் வரை அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கான, விண்வெளி – செயற்கைக்கோள் கண்காணிப்பு கப்பலான 'யுவான் வாங் 5' பயணத்தை உடனடியாக ஒத்திவைக்குமாறு இலங்கை அரசு, சீன அரசிடம் கோரியுள்ளது.

இந்தச் செய்தியை இந்திய ஊடகமான 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' வெளியிட்டுள்ளது.

இந்த உளவுக் கப்பல் ஒகஸ்ட் ☞2

## சர்வகட்சி வேலைத்திட்டத்துக்கு ஆதரவு; அமைச்சுப் பதவிகள் எதுவும் வேண்டாம்

### டலஸ் அணி அறிவிப்பு

சர்வகட்சி வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்புவழங்கினாலும், அமைச்சுப் பதவிகளைப் பெற்றுகொள்ள மாட்டோம்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்காபொதுஜனமுன்னணியின் டலஸ் ஆதரவு அணி ☞2

## இலங்கைக்குத் தீங்கு விளைவிக்காது சீனா

### அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் உறுதி



இலங்கையின் நலன்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய எந்தச் செயலும் மேற்கொள்ளப்படமாட்டாது. அத்துடன் நேர்மையான மற்றும் நம்பகமான நண்பராக இருப்போம். ☞2

## பொல்லால் தாக்கப்பட்டு வயோதிபர் படுகொலை

இருவருக்கிடையில் ஏற்பட்ட முறுகலில் ஒருவர் பொல்லால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

வத்தளை, ஹுனுப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 76 வயது வயோதிபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த ☞2

## 'மொட்டு' எம்.பிக்கள் அழுத்தம்; பறிபோகின்றது பீரிஸின் பதவி



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து பேராசிரியர் ஜி.எல். பீரிஸை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவரான மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் ☞2

## கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் கரையொதுங்கிய ஆணின் சடலம்!

வத்தளையில் ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

வத்தளை, டிக்கோவிட்ட கடற்கரையிலேயே இந்தச் சடலம் கரையொதுங்கியுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. ☞2

## நீதிமன்றில் துப்பாக்கிச்சூடு; இரு பொலிஸார் பணி இடைநீக்கம்




கல்கிஸை நீதிவான் நீதிமன்றில் பாதுகாப்புக் கடமையில் இருந்த இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நீதிமன்றில் வழக்கு விசாரணை ☞2

## தெற்கில் இன்றும் இளைஞர் ஒருவர் சுட்டுப் படுகொலை

கம்பஹாவில் இன்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சலூன் ஒன்றுக்குள் புகுந்த துப்பாக்கிதாரி, குறித்த இளைஞரைச் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா, உடுகம்பொல பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் ☞2

## 'மொட்டு'க் கட்சி எம்.பிக்களை தேடிச் சென்று சந்தித்த பிரதமர்

### சர்வகட்சி அரசுக்கு முழு ஆதரவு திரட்டல்




பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றிரவு 'மொட்டு'க் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

சர்வகட்சி அரசு சம்பந்தமாக ☞2

## துப்பாக்கிகளுடன் இருவர் சிக்கினர்!

இருவேறு பிரதேசங்களில் இருவர் துப்பாக்கிகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

கொழும்பு, பேலியகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வெளிநாட்டுத் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் ☞2

## ‘மொட்டு’ எம்.பிக்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலந்துரையாடி முடிவொன்றை எடுப்பதற்காக ‘மொட்டு’க் கட்சியின் விசேட கூட்டம் விரைவில் இடம்பெறவுள்ளது என்று கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்காக நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பின்போது, ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கட்சி தீர்மானித்திருந்தது. கட்சியின் பொதுச் செயலாளரால் இது தொடர்பில் அதிகார பூர்வமாக அறிக்கையும் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், கட்சியின் தவிசாளரான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு வழங்கினார். அவரின் பெயரையும் வழிமொழிந்தார். தற்போது டலஸ் அணியில் முக்கிய நபராக அவர் திகழ்கின்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் 16 பேர் கொண்ட எம்.பிக்கள் குழு டலஸ் அழகப்பெரும தலைமையில், சுயாதீனமாகச் செயற்பட்டு வருகின்றது .

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே பீரிஸிடமிருந்து தவிசாளர் பதவியைப் பறிக்குமாறு, கட்சித் தலைமையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், டலஸ் அணியில் செயற்படும் உறுப்பினர்களிடமிருந்து ÷மொட்டு’க் கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவியும் பறிக்கப்படவுள்ளது.

## தெற்கில் இன்றும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாக கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் தொடர்ச்சியாகத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் அதிகளவில் பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ‘மொட்டு’க் கட்சி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. ஸ்ரீலங்காபொதுஜனமுன்னணியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவும் இதன்போது கலந்துகொண்டார்.

இதன்போது ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் முன்னெடுக்கும் நகர்வுகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று ‘மொட்டு’க் கட்சி தரப்பில் பிரதமரிடம் உறுதியளிக்கப்பட்டது.

சர்வகட்சி கோட்பாட்டுக்காகவே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் பதவி விலகினர். எனவே, இந்த இலக்கை அடைய தமது கட்சி முழு ஒத்துழைப்பை வழங்கும் என்று மொட்டுக் கட்சி எம்.பிக்கள் தெரிவித்தனர்.

எம்.பிக்கள், பிரதமரைச் தேடிச் சென்றே பேச்சு நடத்துவர். எனினும், ‘மொட்டு’க் கட்சி தலைமையகத்துக்கே வந்து அக்கட்சியினருடன் பிரதமர் கலந்துரையாடியுள்ளார்.

## துப்பாக்கிகளுடன் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நவகமுவ, ரணால பிரதேசத்தை சேர்ந்த 36 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் தலைமையகத்துக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் அவரது வீட்டைச் சோதனை செய்தபோது வெளிநாட்டுத் துப்பாக்கி, தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, கொழும்பு அவிஸாவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலட்டுவாவ பிரதேசத்தில் உள்நாட்டுத் துப்பாக்கி ஒன்றுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தும்மோதர பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## கை, கால்கள் கட்டப்பட்ட ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
35 இற்கும் 40 இற்கும் இடைப்பட்ட வயதானவராக இருக்கலாம் என்று நம்பப்படும் இந்த ஆணின் கைகள் இரண்டும், கால்கள் இரண்டும் கட்டப்பட்ட நிலையில் இருக்கின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும், சடலம் இன்னும் அடையாளம் காணப்படவில்லை என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## இரு பொலிஸார் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் குறித்த இருவரும் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

குற்றவாளிக் கூட்டில் இருந்த ஒருவர் மீதே இவ்வாறு துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

பின்னர் பொலிஸ் பாதுகாப்பையும் மீறி துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்ட நபர் அவ்விடத்தில் இருந்து தப்பிச்சென்றிருந்தார்.

இந்நிலையில், துப்பாக்கிச்சூடு இடம்பெற்றபோது பாதுகாப்புக் கடமையில் இருந்து பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவரே இவ்வாறு பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

## பொல்லால் தாக்கப்பட்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நபர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கைக்குத் தீங்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
– இவ்வாறு உறுதியளித்துள்ளது சீனா.

சீன அரசவை உறுப்பினரும் வெளிவிவகார அமைச்சருமான வாங் யீ, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்றியை கம்போடியாவில் சந்தித்துப் பேசினர்.

இதன்போது, சீன அரசும் மக்களும் இலங்கைக்கு அவசரகால மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளதுடன் இருதரப்பு மற்றும் பலதரப்பு வழிகள் மூலம் தொடர்ந்து உதவிகளை வழங்குவதாக சீன வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கையின் புதிய அரசு, நாட்டை சரியான பாதைக்குக் கொண்டு செல்லும் என்று சீனா நம்புவதாகவும் அவர் கூறினார்.

இதற்குப் பதிலளித்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி, சீனாவின் கொள்கையில் இலங்கை உறுதியாக இருக்கின்றது என்றும், சீனாவின் உள் விவகாரங்களில் தலையிடும் மற்றும் பதற்றத்தைத் தூண்டும் எந்தவொரு செயலையும் இலங்கை எதிர்க்கின்றது என்றும் குறிப்பிட்டார்.

இலங்கையில் சீனாவின் ‘கடன் பொறி’ என்று கூறப்படும் கூற்றை மறுத்த அலி சப்ரி, இலங்கையின் வெளிநாட்டுக் கடனில் 10 சதவீதத்தை மட்டுமே சீனா கொண்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

சீனாவின் உதவி இல்லாமல் இலங்கை எந்த வளர்ச்சியையும் அடைந்திருக்காது என்றும் அவர் அலி சப்றி மேலும் தெரிவித்தார்.

## சர்வகட்சி வேலைத் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுப்பினர்கள் கொழும்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதன்போதே ‘மொட்டு’க் கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பியான பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

மக்கள் நலன்சார்ந்து அரசால் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும். எனினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பதவிகளை ஏற்பதற்குத் தயாரில்லை என்றும் பீரிஸ் மேலும் குறிப்பிட்டார்.

## ‘யுவான் வாங் 5’ ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
11 ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்து ஓகஸ்ட் 17 ஆம் திகதி புறப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும், இந்தக் கப்பல் பயணத்தின் உண்மையான நோக்கம் என்ன என்பதை அறிவிக்குமாறு இந்தியா, இலங்கையிடம் கோரியுள்ளது.

இதையடுத்தே கப்பல் பயணத்தை ஒத்திவைக்குமாறு இலங்கை, சீனாவிடம் கோரியுள்ளது என இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

‘யுவான் வாங் 5’ கப்பல், ஜுலை 13 ஆம் திகதி சீனாவின் ஜியாங்யினில் இருந்து புறப்பட்டு தற்போது தாய்வானுக்கு அருகில் அம்பாந்தோட்டையை நோக்கிப் பயணிக்கின்றது.

இந்தநிலையில், இலங்கை வெளியுறவு அமைச்சு, சீனாவின் கப்பலை அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுத்துவதற்கான அனுமதியை ஒத்திவைக்கும் கோரிக்கையை முறையான இராஜதந்திர வழிகள் மூலம் சீன வெளியுறவு அமைச்சின் சக அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் அனுப்பியுள்ளது என்று ‘ஹிந்துஸ்தான் டைம்ஸ்’ வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிங்கப்பூரில் மேலும் 14 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த மாதம் இறுதிவரை சிங்கப்பூரில் தங்கியிருக்கும் வகையில் மேலும் 14 நாள்கள் தங்கியிருப்பதற்குச் சிங்கப்பூர் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார் என்று அரசியல் உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ‘முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாடு திரும்புவதற்குப் பொருத்தமான நேரம் இதுவல்ல. அவர் இந்த நேரத்தில் நாட்டுக்கு வந்தால் அரசியல் ரீதியிலான பிரச்சினைகள் ஏற்படலாம்’ – என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்குக் கடந்த வாரம் வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

இதற்கு உள்நாட்டு ஊடகங்களிடம் பதிலளித்திருந்த ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி., ‘கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பினால் முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் அவருக்குத் தேவையான பாதுகாப்பு உள்ளிட்ட வசதிகளை அரசு செய்து கொடுக்க வேண்டும்’ – என்று கூறியிருந்தார்.

## இலங்கை இராணுவ ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதற்காக சர்வதேச நீதி அமைப்பைப் பயன்படுத்துமாறும் ஐ.நா. உறுப்புரிமையிலுள்ள 47 நாடுகளின் தலைவர்களிடம் மிச்சேல் பச்லெட் கோரிக்கை விடுத்துள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட 58 இராணுவத்தினரையும் கைதுசெய்ய இலங்கை அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையிலேயே, அவர்களைக் கைதுசெய்ய சர்வதேச நீதி அமைப்பை அமுல்படுத்த வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

தற்போது இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, சீனா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு மட்டுமே இலங்கை இராணுவ அதிகாரிகள் செல்ல முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதிக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள விசேட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்தச் சவால்களை எதிர்கொள்வதற்கான தேசிய மூலோபாயத்தை வகுப்பதில் அனைத்து அரசியல் கட்சிகளிடையே ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு ஜனாதிபதியின் அர்ப்பணிப்பை ஐ.நா. பொதுச் செயலாளர் ஒப்புக்கொண்டுள்ளதோடு, அவ்வாறு செய்யும்போது பொதுமக்களுடன் கலந்தாலோசித்தல், சட்டத்தின் ஆட்சி மற்றும் அடிப்படை மனித உரிமைக் கோட்பாடுகளுக்கு மதிப்பளித்தல் உட்பட அனைத்துத் தரப்பினருக்குமிடையில் கலந்துரையாடலை ஊக்குவிப்பதன் முக்கியத்துவமும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், பெண்களின் அரசியல் பங்கேற்புக்கான இலங்கையின் முயற்சிகளை அங்கீகரிப்பதிலும், முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கு ஜனாதிபதியின் தலைமைத்துவத்தை ஊக்குவிப்பதிலும் ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை, இலங்கை அரசுக்கும் மக்களுக்கும் உடனடி மற்றும் நீண்டகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளதுடன், அனைத்து இலங்கையர்களுக்கும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், நிலையான அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றில் ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்பைத் தொடர்ந்து பேணுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் அந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி - ஜே.வி.பி. .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சர்வகட்சி அரசு மற்றும் அதற்கான வேலைத்திட்டங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளன.

சர்வகட்சி அரசு தொடர்பில் அரசியல் கட்சிகளுடன் ஜனாதிபதி பேச்சு நடத்தி வருகின்றார். இதன் ஓர் அங்கமாகவே மேற்படி சந்திப்பும் இடம்பெறவுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு – தொலைபேசி இலக்கம்- 076 443 8622



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சுடலை ஞானப் பேச்சு

அதிகாரத்தில் இருக்கும் பலருக்குப் பெரும்பாலும் சுடலை ஞானம்தான் பிறக்கும்.

வாழும் போது புரியாத அறிவு – சுடலைக்குக் கட்டையில் ஏறப் போகும்போதுதான் ஞானமாகப் பிறக்கும் என்பதே இதன் அர்த்தம். உயிர் பிரியும் போது பிறக்கும் ஞானத்தால் – அறிவால் – பயனில்லை. இருக்கும் காலம் முழுவதும் செய்ய வேண்டியவற்றை செய்யாமல் விட்டுவிட்டு, மறுவாழ்வுக்குப் புறப்படும் போது அது குறித்து அறிவு பிறந்து பயனில்லை.

அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல. சர்வதேச நீதியில் முக்கிய பதவிகளை வகிக்கும் ராஜதந்திரிகளுக்குக் கூட இப்படி நேர்வது விதிவிலக்கல்ல. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சலெட் பச்சிலட் அம்மையார் கூட இந்த வகையறாக்களுக்கு வேறல்லர்.

2018 செப்டெம்பர் முதலாம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பதவியை ஏற்ற அவரின் நிர்வாகக்காலம் இன்னும் 24 நாள்களில் – ஒகஸ்ட் 31ஆம் திகதி – முடிவுக்கு வருகின்றது.

அடுத்த மாதம் செப்டெம்பரில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 51 ஆவது கூட்டத் தொடர் தொடங்கும் போது ஆணையாளர் பதவியில் மிச்சலெட் பச்சிலட் அம்மையார் இருக்க மாட்டார்.

அடுத்த மாதம் நடைபெறும் 51ஆவது அமர்வில்தான் இலங்கை தொடர்பில் – இலங்கையின் யுத்த கால நடவடிக்கைகள், யுத்தக் குற்றங்கள் சம்பந்தமாக – ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் மிக முக்கிய தீர்மானம் எடுக்க வேண்டி இருக்கிறது.

எனினும் இலங்கையின் மோசமான பொருளாதார நெருக்கடி, அரசியல் குழப்பம், உள்நாட்டு களேபரங்கள் போன்றவற்றைக் காரணம் காட்டி, அவற்றின் அடிப்படையில் நாடும், அரசும் மீண்டு வருவதற்கு மேலும் கால அவகாசம் வழங்கும் வகையில் இன்னமும் இரண்டு வருடங்களை இலங்கைக்கு வழங்குவதற்கான வழமையான பல்லவியை இணை அரசனை நாடுகள் எல்லாம் சேர்ந்து இம்முறையும் பாடும். புதிதாக அதிகாரத்துக்கு வந்திருக்கும் ரணிலின் அரசு அதையே சாட்டாகக் காட்டி, சில சமயங்களில் தானும் சேர்ந்து இணை அனுசரனை பணி வகித்து, அப்படி ஒரு தீர்மானத்தை எடுத்து, காலத்தை இழுத்தடிக்கும் கைங்கரியத்தை கனகச்சிதமாக ஒப்பேற்றும்.

யுத்தம் முடிந்து 13 வருடங்களாக நீதி நியாயம் திட்டாமல் விட்டத்தை பார்த்தபடி மலைக்கு நிற்கும் தமிழர் சமுதாயம், வழமைபோலமேலும்இரண்டுஆண்டுகளுக்கு நீதி திட்டாத துயரில் துயில் கொள்ள வேண்டியதுதான்.

இதற்கிடையில் –

இன்னும் மூன்றே வார காலத்தில் பதவியை விட்டு விலக உள்ள மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சலெட் பச்சிலட் அம்மையார் இவ்வளவு காலமும் இருந்துவிட்டு, இப்போது யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்திற்கு எதிரான கொடூரங்கள் போன்றவற்றை இழைத்த குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகி இருக்கும் 58 இலங்கைப் படையினரையும் கைது செய்து சர்வதேச நீதி பொறிமுறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கதையை புதிதாக அவிழ்த்து விட்டிருக்கின்றார்.

தம்முடைய நான்கு வருட நிர்வாகக் காலத்தில் இலங்கை தொடர்பாக பலமுறை வாய் மூலமும் எழுத்திலும் பல அறிகைகளை உத்தியோகபூர்வமாக சமர்ப்பித்து வெளியிட்ட அம்மையாருக்கு, இப்போது கதிரையை விட்டுக் கிளம்பும் சமயத்தில்தான் கைது செய்ய வேண்டும் என்ற இந்த ஞானம் பிறந்திருக்கின்றது.

வழமை போல, சுடலை ஞானத்தினால் பலனேதும் இல்லை என்பது போன்றுதான் இந்த விடயங்கள் தென்படுகின்றன. இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் பச்சாதாபத்துடனான அவரது இந்தக் கூற்றுக் கூட அவமாகவே முடியும். அது பலன் தரப்போவதில்லை.

ஏனெனில் அவரது பதவி நிலைக்கு இது காலம் கடந்த கூற்று மட்டுமே!

புதுக்குடியிருப்பு பிரதேச செயலரை அசௌகரியப்படுத்தியமை;

# பொலிஸாருக்கு எதிராக கவனவீர்ப்பு போராட்டம்!

## நிர்வாக சேவை அதிகாரிகள் நடத்துகின்றனர்

(ந.லோகதயாளன்)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரை வேண்டுமென்றே அசௌகரியப்படுத்தியமைக்கு எதிராக நிர்வாக சேவை அதிகாரிகளால் திங்கட்கிழமை கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரின் விடுதியில் செயலக பாவனைக்கான எரிபொருள் வைத்திருந்த சமயம் இரவு நேரம் வேண்டுமென்றே பழிவாங்கும் நோக்கில் இடம்பெற்ற சோதனை என்னும் பெயரில் அசௌகரியப்படுத்தியமையை கண்டித்தே இந்தப் போராட்டத்துக்கு நிர்வாக சேவை வடக்கு கிளைச் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. இதற்கமைய திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 11 மணி வரையான நேரத்தில் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதோடு முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாகக் கவனவீர்ப்பு போராட்டத்திலும் ஈடுபடவுள்ளதாகவும் அதற்கு ஏனைய தொழிற்சங்கங்களும் தமது ஒத்துழைப்பை வழங்கியுதவுமாறும் சங்கத்தின் வடமாகாண கிளைத் தலைவர் சிவபாலன் குணபாலன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# கோட்டாவைக் கைது செய்! யாழில் சுவரொட்டிகள்!

இலங்கையை இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கிய தமிழனப் படுகொலையாளி கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய் என்ற தொனியில் யாழில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டிலேயே இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினரை ஊழல்வாதிகளாக வெளிப்படுத்தும் சித்திரத்துடன் தென்னிலங்கை போராட்ட களங்கள் அமைந்திருந்த நிலையில், தமிழர் தேசத்தைப் பொறுத்தவரை அவர்கள் தமிழினப் படுகொலையாளிகள் என்பதை இந்தச் சுவரொட்டிகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளதாக தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை தெரிவித்துள்ளது.

# சீரற்ற காலநிலை காரணமாக 13 ஆயிரத்து 739 பேர் பாதிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 5 பேர் உயிரிழந்துள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நிலச்சரிவில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் 4 பேர் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் கண்டி, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் விசேட விழிப்புணர்வு பிரிவின் பணிப்பாளர் சுகத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சீரற்ற காலநிலையால் 65 பிரதேச செயலகப் பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் கடும் மழை மற்றும் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக மூவாயிரத்து 471 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 739 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், 137 குடும்பங்களைச் சேர்ந்த 574 பேர் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஆயிரத்து 149 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், 141 வணிக நிறுவனங்களும் சேதமடைந்துள்ளன.

# 22 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் கடந்த 2 மாதங்களில் பதிவாகின!

இலங்கையில் கடந்த மே மாதம் 30 ஆம் திகதி முதல் நேற்று (வெள்ளிக்கிழமை) வரை 22 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து பதிவாகியுள்ள இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் மொத்தம் 23 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளே பெரும்பாலான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் பின்னணியில் இருக்கின்றனர் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# 48மணிநேரத்துக்கு கியு.ஆர். நிறுத்தம்!

புதிய பயனர்களுக்கான எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக கியு.ஆர். பதிவுகளை அடுத்த 48 மணிநேரத்துக்கு மேற்கொள்ள முடியாது என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கணனி அமைப்பில் ஏற்பட்ட பராமரிப்பு பணி காரணமாகவே இந்த இடையூறு ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பராமரிப்புப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் மீண்டும் கியு.ஆர். குறியீட்டில் பதிவு செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# காஸா மீது இஸ்ரேல் படைகள் வான்வழித் தாக்குதல் பலஸ்தீன போராளிகளை குறிவைத்தும் குண்டுவீச்சு

## 5 வயது சிறுமி உள்பட 10 பேர் உயிரிழப்பு



'காஸா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹிமாஸ் பயங்கரவாத அமைப்பின் மூத்த தளபதி உட்பட 10 பேர் கொல்லப்பட்டிருக்கின்றமை பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்திற்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவி வருகிறது. பலஸ்தீனத்தின் மேற்கு கரை மற்றும் காஸா முனை பகுதியில் இருந்து இஸ்ரேல் மீது அவ்வப்போது தாக்குதல் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. இதற்கு இஸ்ரேல் தரப்பில் பதில் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. மூன்று நாள்களுக்கு முன்பு இஸ்ரேல் படைகள் மேற்கு கரை பகுதியில் பதுங்கி இருந்த ஹமாஸ் தீவிரவாத அமைப்பின் முக்கிய தலைவரை கைது செய்திருந்த நிலையில், நேற்று இரவு காஸா முனையின் மத்திய பகுதியில் சரமாரியாக வான்வழித் தாக்குதல்களை நடத்தியது.

இஸ்ரேலில் தாக்குதல்களை நடத்த திட்டமிட்டிருந்த பலஸ்தீன தீவிரவாத அமைப்பினரை குறிவைத்தே தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் இடைக்கால பிரதமர் யாயிட் லாபிட் தெரிவித்திருக்கிறார். இஸ்ரேலுக்கும், குடிமக்களுக்கும் தீங்கு இழைப்பவர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார். ஹமாஸ் அமைப்பை சேர்ந்த டைசி அல் ஜபாரி என்பவரின் இருப்பிடத்தை குறிவைத்து இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இதில் அல் ஜபாரி கொல்லப்பட்டு விட்டார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. இஸ்ரேல் படைகளின் தாக்குதலில் 5 வயது சிறுமி, ஒரு பெண் உள்ளிட்ட மேலும் 9 பேர் உயிரிழந்திருக்கின்றனர்.

50க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். இஸ்ரேலில் விரைவில் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில் இடைக்கால பிரதமராக இருக்கும் லாபிட் தன்னுடைய பலத்தை நிரூபிக்க இந்த தாக்குதலை நிகழ்த்தியிருக்கிறார் என கூறப்படுகிறது. இஸ்ரேலின் தாக்குதலுக்கு எந்நேரத்திலும் பலஸ்தீனம் பதிலடி தரும் என்பதால் இஸ்ரேலில் பெரும் பதற்றம் ஏற்பட்டிருக்கிறது. வான்வழி தாக்குதல்களை தடுக்க இஸ்ரேல் விமானப் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.



# எலான் மஸ்க் சொல்வது பொய் டுவிட்டர் நிறுவனம் குற்றச்சாட்டு

உலகின் பெரும் பணக்காரரும், டெஸ்லா தலைவருமான எலான் மஸ்க், டுவிட்டர் நிறுவனத்தை ரூ.3.50 லட்சம் கோடிக்கு வாங்குகிறேன் என கடந்த ஏப்ரலில் ஒப்பந்தம் செய்தார். ஆனால், டுவிட்டர் நிறுவனம் கூறியதை விட 4 மடங்கு போலிக் கணக்குகள் இருக்கின்றன எனவும், அது குறித்த முழு விவரங்களை தராததால் டுவிட்டரை வாங்கும் ஒப்பந்தத்தை ரத்து செய்கிறேன் எனவும் மஸ்க் அறிவித்தார். இதனால், டுவிட்டரின் பங்குகள் சரிந்தன.

இதையடுத்து, அமெரிக்க நீதிமன்றத்தில் மஸ்க் மீது டுவிட்டர் நிர்வாகம் வழக்கு தொடர்ந்துள்ளது. இந்த விசாரணை வரும் ஒக்ரோபர் 17ம் திகதி முதல், 5 நாள்கள் தொடர்ந்து நடைபெறும் என்று டெலாவேர் சான்சரி நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இந்த வழக்கில் மஸ்க் தாக்கல் செய்துள்ள பதில் மனுவில், 'உண்மையான பயனர்களின் எண்ணிக்கை 6.5 கோடிக்கு குறைவாக இருப்பதை மறைத்து, 23.8 கோடி பயனர்கள் இருக்கின்றனர் என கூறி டுவிட்டர் என்னை ஏமாற்றி விட்டது. குறைந்த பயனர்கள் பார்க்கும் விளம்பரத்தின் மூலம் நான் எப்படி வருவாய் ஈட்ட முடியும்?,' என்று கூறப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக டுவிட்டர் தாக்கல் செய்துள்ள மனுவில், 'ஒப்பந்தத்தை மீறுவதற்காக உண்மைக்கு புறம்பான பொய்களை மஸ்க் கூறியுள்ளார்,' என்று தெரிவித்துள்ளது.

## அதிகரிக்கின்றது பதற்றம்

# தாய்வானுக்கு விரைந்தது அமெரிக்க போர்க்கப்பல்



தாய்வான் எல்லையை சுற்றி சீனா உக்கிரமாக ராணுவ பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளதால் போர்ப் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் அமெரிக்காவின் பிரம்மாண்ட போர்க் கப்பலான யு.எஸ்.எஸ் ரெனால்ட் தாய்வானுக்கு விரைந்துள்ளது. சீனாவிடம் இருந்து பிரிந்து தனி நாடாக தாய்வான் செயல்பட்டு வந்தாலும் அதன் மீது தொடர்ந்து கண் வைத்திருக்கிறது சீனா. தாய்வானை மீண்டும் தன்னுடன் இணைத்துக்கொள்ள தக்க தருணத்தை எதிர்பார்த்து சீனா காத்திருக்கும் நிலையில், அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசியின் சமீபத்திய தாய்வான் பயணம் சீனாவை ஆத்திரமடைய செய்திருக்கிறது.

இதையடுத்து கடந்த 2 நாள்களாக தாய்வான் எல்லையைச் சுற்றி 6 பகுதிகளில் சீனா தீவிர பயிற்சிகளை மேற்கொண்டுள்ளதால் சீனா, தாய்வான் எல்லையில் போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளது. தாய்வானின் வடகிழக்கு மற்றும் தென்மேற்கு கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் சீனா10க்கும்மேற்பட்டஅதிநவீனஏவுகணைகளை வீசி சோதித்தது. சீனாவின் இந்த தாக்குதலுக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இதனிடையே போர்ப் பயிற்சியின்போது சீனா பயன்படுத்திய ஏவுகணைகளில் சில தங்கள் நாட்டின் எல்லையில் உள்ள பொருளாதார மண்டலத்தில் விழுந்தன என ஜப்பான் அரசு குற்றம் சாட்டியிருக்கிறது.

ஜப்பான் வந்துள்ள அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசியை வரவேற்றபின் செய்தியாளர்களிடம் பேசிய ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா, சீனாவுக்கு கடும் கண்டனம் தெரிவித்தார்.

தாய்வான் எல்லையில் சீனா மேற்கொண்டு வரும் தீவிர ராணுவ பயிற்சி வரும் ஞாயிறு வரை நீடிக்கும் என்று கூறப்படும் நிலையில், அமெரிக்க கடற்படை விமான தாங்கிக் கப்பலான யு.எஸ்.எஸ். ரெனால்ட் தாய்வான் விரைந்துள்ளதாக அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது.




# மதுபான விடுதியில் தீ; 13 பேர் சாவு

தாய்லாந்தில் உள்ள மதுபான விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 13 பேர் உடல் கருகி பரிதாபகரமாக உயிரிழந்தனர். தாய்லாந்தில் சோன்புரி மாகாணத்தின் சத்தாஹிப் மாவட்டத்தில் உள்ள இரவு நேர மதுபான விடுதி ஒன்றில் நேற்று திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இதில், 13 பேர் உடல் கருகி பலியாகினர். 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

தீ விபத்து ஏற்பட்ட காட்சிகள் அங்கிருந்த சி.சி.டி.வி. கமராக்களில் பதிவாகி உள்ளன. அதில், பலரது ஆடைகள் தீப்பிடித்த நிலையில் அலறியடித்துக் கொண்டு ஓடும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. தீயணைப்பு துறையினர் இரண்டு மணி நேர போராட்டத்துக்கு பின்னர் தீயை அணைத்தனர்.

# அமெரிக்காவில் வேகமெடுக்கிறது குரங்கம்மை நோய்த் தொற்று

## இதுவரை 7,100 பேர் பாதிப்பு

கொரோனா அச்சுறுத்தல் இன்னும் முடியாத நிலையில், தற்போது குரங்கம்மை நோய் உலகளவில் பரவி வருகிறது. கட்டியணைத்தல், முத்தமிடுதல், ஆடைகள், டவல் மற்றும் படுக்கையை பகிர்ந்து கொள்வதன் மூலம் இந்த நோய் பரவும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இதனால், இந்த நோய் பரவலைக் கட்டுப்படுத்த, உலக சுகாதார நெருக்கடி நிலையை உலக சுகாதார அமைப்பு சமீபத்தில் அறிவித்தது.இந்நிலையில், அமெரிக்காவில் குரங்கம்மை நோய் அதிகளவில் வேகமாக பரவுகிறது.

உலகளவில் மிகவும் அதிகப்பட்சமாக இந்த நாட்டில் இதுவரையில் 7,100 பேர் இந்நோயால் பாதித்துள்ளனர். குறிப்பாக, ஓரினச் சேர்க்கையாளர்கள் அதிகளவில் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால், இந்த நோயை சுகாதார அவசர நிலையாக அமெரிக்கா நேற்று பிரகடனம் செய்தது.

குரங்கம்மை நோய் பரவத் தொடங்கிய இந்த 3 மாதங்களில், ஸ்பெயின் நாட்டில் மொத்தம் 4,577 பேருக்கு இந்நோய் உறுதியாகி உள்ளது. ஐரோப்பாவில் இந்த வைரஸ் உடலுறவு மூலமும் பரவுகிறதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக நிபுணர்கள் கூறியுள்ளனர்.



# 5ஜி அலைக்கற்றை ஏலத்தில் முறைகேடு நடைபெற்றதா? ராசாவின் குற்றச்சாட்டுக்கு அண்ணாமலை விளக்கம்



சமீபத்தில் நடந்த 5ஜி அலைக்கற்றை ஏலத்தில் முறைகேடு நடந்திருப்பதாக ஆ.ராசா எம்.பி. குற்றஞ் சாட்டியுள்ளார். 5ஜி அலைக்கற்றை 5 லட்சம் கோடி ரூபாவுக்கு ஏலம் போகும் என மத்திய அரசு முன்னதாகத் தெரிவித்திருந்த நிலையில், ஒன்றரை லட்சம் கோடி ரூபாவுக்குத்தான் ஏலம் போய் இருப்பதாகவும், இது குறித்து விசாரிக்கப்பட வேண்டும் என்றும் ஆ.ராசா வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் செய்தியாளர்களை சந்தித்த தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையிடம் ஆ.ராசாவின் குற்றச்சாட்டுக் குறித்து நிருபர்கள் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளித்த அண்ணாமலை, இதுவரை நடந்த அலைக்கற்றை ஏலத்திலேயே இதுதான் அதிக தொகைக்கு ஏலம் போயிருப்பதாக விளக்கம் அளித்துள்ளார்.

2008 இல் நடைபெற்ற 2ஜி ஊழலில் 2 விடயங்கள் அடிப்படையாக இருந்தன. 2001இல் இருந்த அடிப்படை விலையை 2008 க்கு ராசா பயன்படுத்தினார். விண்ணப்பத்தில் குளறுபடிகள் செய்தமை இரண்டாவது விடயம். அப்போதெல்லாம் ஏலம் நடக்கும்போது லைசென்சும் ஸ்பெக்ட்ரமும் சேர்ந்து கொடுப்பார்கள். தற்போது நடந்த ஏலத்தில் லைசென்ஸ் கிடையாது, ஸ்பெக்ட்ரம் மட்டுமே.

2008இல் நடந்தது லைசென்சும் ஸ்பெக்ட்ரமும் இணைந்த நடைமுறை. இப்போது லைசென்சை தனியாக வாங்கி விட்டு, ஸ்பெக்ட்ரமை தனியாக ஏலம் விடுகிறார்கள். அதனால் ராசா, 2009இல் முதலில் வருவோருக்கு முதலில் முன்னுரிமை என்ற முறையை கொண்டு வந்தார். அவரே ஒரு திகதியை முடிவு செய்து, நாளை காலைக்குள் யாரெல்லாம் அலுவலகத்திற்கு வந்து விண்ணப்பம் தாக்கல் செய்கிறார்களோ, அவர்களின் மனுக்களை பரிசீலனை செய்வோம் என்று கூறியிருந்தார். குறிப்பாக சில குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு மட்டும் முன்பே தகவல் தெரிவித்துள்ளனர். அவர்கள் லைசென்சுக்கு விண்ணப்பித்துள்ளனர். அதனால்தான் சி.பி.ஐ. விசாரணை நடத்தியது.

லைசென்ஸ் எடுத்த ஒரு நிறுவனமானது, கலைஞர் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த ஒரு நிறுவனமொன்றின் மூலமாக பணம் அனுப்பியிருந்தார்கள். சி.பி.ஐ. விசாரணை ஆரம்பித்ததும் கலைஞர் தொலைக்காட்சி அந்தப் பணத்தை திரும்ப கொடுத்துவிட்டு, அந்த கம்பனியிடம் இருந்து கடனாக வாங்கினோம், எங்களுக்கும் அதுக்கும் சம்பந்தம் இல்லை என்று பொய் சொல்லியிருந்தார்கள். அதன்பின் சி.ஏ.ஜி. தலைவர் வினோத் ராய் விசாரணை நடத்தி, 2001 மற்றும் 2008 விலை நிலைவரத்தை ஒப்பிட்டு பார்த்து, அரசுக்கு 1 லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று விளக்கம் கொடுத்தார்.

அதன்பின்னர் காங்கிரஸ் ஆட்சியில் 2012இல் 2ஜி ஏலம் நடந்தது. முறைகேடு செய்து கொடுக்கப்பட்ட லைசென்சை உச்ச நீதிமன்றம் ரத்துச் செய்ததையடுத்து இந்த ஏலம் நடந்தது. அப்போது மன்மோகன் சிங் அரசு, இதன் மூலம் 28 ஆயிரம் கோடி ரூபா வருமானம் வரும் என்று தெரிவித்தது. ஆனால், மத்திய அரசுக்கு வந்த வருமானம் 9,400 கோடி ரூபா மட்டுமே. அலைக்கற்றை ஒதுக்கீட்டை பொறுத்தவரை, மதிப்பிடப்படும் விலைக்கும், உண்மையான வருவாய்க்கும் வித்தியாசம் இருக்கும்.

இப்போது நடந்த ஏலம் என்பது 5ஜி அலைக்கற்றைக்கு மட்டுமல்ல, 2ஜி, 3ஜி, 4ஜி அலைக்கற்றைகளுக்கும் சேர்த்துதான் நடந்தது. இதில் 5ஜி மட்டும் கொடுக்கவேண்டும் என்பது 700 மெகா ஹெர்சில் மட்டுமே சாத்தியம். அது தற்போதுதான் முதன்முதலில் விற்கப்பட்டுள்ளது. மூன்று முறை நடந்த ஏலத்தில் யாரும் வாங்கவில்லை. ஏனென்றால் எல்லோரிடமும் அதற்கான தொழில்நுட்பம் இல்லை. இதை வாங்கி என்ன செய்வது? இப்போது வாங்கலாமா? எதிர்காலத்தில் வாங்கிக்கொள்ளலாமா? என நினைத்து யாரும் வாங்காமல் இருந்தனர், என்றும் அண்ணாமலை தெரிவித்திருக்கிறார்.

## அரசு ஊழியர்களுக்கு உரிய காலத்தில் பதவி உயர்வு வழங்க தமிழக தலைமைச் செயலாளர் அறிவுறுத்து



தகுதியுள்ள அரசு அலுவலர்கள் பதவி உயர்வு பெறாமல் ஓய்வு பெறுவதை தவிர்க்க வேண்டும், என்று தமிழக தலைமைச் செயலாளர் இறையன்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருக்கிறார்.

ஓய்வுபெறும் நாளன்று செயற்கையான காலியிடங்களை ஏற்படுத்தி பதவி உயர்வு மேற்கொள்ளப்படுவதாக புகார் எழுந்துள்ளது. எனவே, பதவி உயர்வைப் பெற்று முழுச் சேவை செய்யாமலேயே பணப் பலன்களை சிலர் பெறுகின்றனர் எனவும் குற்றச்சாட்டுகள் அரசிடம் முன்வைக்கப்பட்டுள்ளன, என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இதனால், செயற்கை காலிப்பணியிடங்களை ஏற்படுத்துதல், தற்காலிகப் பதவி உயர்வு வழங்குதல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். இது தொடர்பான உத்தரவு அனைத்துத் துறை செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



## மனித உரிமை ஆணைய வெள்ளி விழா முதலமைச்சர் ஸ்டாலின் பங்கேற்பு

தமிழகத்தின் மனித உரிமை ஆணைய வெள்ளிவிழா இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. சென்னை, கலைவாணர் அரங்கில் நடந்த மாநில மனித உரிமை ஆணையத்தின் வெள்ளிவிழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி, தேசிய மனித உரிமை ஆணையத் தலைவர் அருண் மிஸ்ரா, சுப்ரீம் கோர்ட் நீதிபதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில் சிறப்பாக பணியாற்றிய மாவட்ட ஆட்சியர்களுக்கு பரிசுகளை வழங்கி மு.க.ஸ்டாலின் கௌரவித்துள்ளார். திருவள்ளூர், கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர்களுக்கு அவர் பரிசுகளை வழங்கினார்.

## தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருள்களை விற்ற 101 பேர் தமிழகத்தில் ஒரே நாளில் கைது



தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா, மாவா உள்ளிட்ட புகையிலைப் பொருள்களை முற்றிலும் ஒழிப்பதற்காக சென்னை காவல்துறை ஆணையர் சங்கர் ஜிவால் உத்தரவின்பேரில் புகையிலைப் பொருள்கள் ஒழிப்பு நடவடிக்கை என்ற பெயரில் அவ்வப்போது சிறப்புச் சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதன்படி அனைத்து காவல் நிலைய இன்ஸ்பெக்டர்கள் தலைமையில் தனிப் படை அமைக்கப்பட்டு இரு தினங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட அதிரடிச் சோதனையில், இதில் பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளுக்கு அருகே குட்கா புகையிலைப் பொருள்களை விற்பனை செய்த 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 5 கிலோ குட்கா புகையிலைப் பொருள்கள், 350 சிகரெட் பக்கெட்டுகள் போன்றவை பறிமுதல் செய்யப்பட்டன.

பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் நடத்தப்பட்ட சோதனைகளில், குட்கா புகையிலைப் பொருள்களை விற்ற 74 பேர் கைது செய்யப் பட்டனர். அவர்களிடமிருந்து 34 கிலோ குட்கா புகையிலை பொருள்களும் 505 சிகரெட் பக்கெட்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பொருள்களை விற்பனை செய்த குற்றத்துக்காக ஒரே நாளில் 101 பேர் மீது கைது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருப்பதி கோவில் உண்டியலில் போடப்பட்ட கைக்கடிகாரங்கள் 18 ஆம் திகதி ஏலத்தில்



*திருப்பதி ஏழுமலையான் கோவில் மற்றும் திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான கோவில்களில் பக்தர்கள் உண்டியலில் நன்கொடையாக அளித்த கைக்கடிகாரங்கள் வரும் 18 ஆம் திகதி ஏலம் விடப்படவுள்ளதாக திருமலை திருப்பதி தேவஸ்தானம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருக்கிறது.*

*இதில் சீகோ, எச்.எம்.டி., டைட்டன், சோனி, கசியோ, ரோலக்ஸ் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் மொத்தம் 22 புதிய, பயன்படுத்தப்பட்ட மற்றும் லேசாக சேதமடைந்த கைக்கடிகாரங்கள் மாநில அரசின் கொள்முதல் இணையத்தில் மின்னணு முறையில் ஏலம் விடப்படவுள்ளன. தேவஸ்தானத்தின் இணையத்தளம் www.tirumala.org அல்லது மாநில அரசின் இணையத்தளமான www.konugolu.ap.gov.in ஆகியவற்றில் விவரங்களை அறியலாம், என்றும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

# மட்டக்களப்பு கொக்குவிலில் நேற்று சந்தைக் கட்டடத்துக்கு அடிக்கல்





(க.கிருபாகரன்)

உலக வங்கியின் நிதியுதவியில் மட்டக்களப்பு மாநக ரசபையினால் நிர்மாணிக்கப்படவுள்ள கொக்குவில் பொதுச் சந்தையின் இறைச்சி மற்றும் மீன் விற்பனைத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று மட் டக்களப்பு மாநகர சபையின் மூன்றாம் வட்டார உறுப்பினர் க.ரகுநாதன் தலைமையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாநகர சபை, உலக வங்கியின் உள் ளூர் அபிவிருத்தி உதவிச் செயற்றிட்டத்தின் ஊடாக சுமார் ஐம்பது லட்சம் ரூபா செலவில் நவீன மயப்படுத் தப்பட்ட வகையில் கொக்குவில் பொதுச் சந்தைக்கான இறைச்சி மற்றும் மீன் விற்பனை பகுதிகளை உள்ளடக் கிய கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்படவுள்ளது. உள்ளூர் வியாபாரிகளினதும், நுகர்வோரினதும் நன்மை கருதி நிர்மாணிக்கப்படவுள்ள மேற்படி விற்பனைத் தொகுதிக் கான அடிக்கல்லை மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நட்டார். விசேட அதிதியாக மட்டக்க ளப்பு மாநகரசபை ஆணையாளர் நா.மதிவண்ணனும், சிறப்பு அதிதிகளாக மாநகரசபை உறுப்பினர்களும் கலந்து கொண்டு அடிக்கல்லினை நட்டு வைத்தனர்.

பொதுமக்களின்நலன்கருதிஅவர்கள்பொருள்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ளும் நோக்குடனும், வியா பாரிகள் தமது பொருள்களை பாதுகாப்பாக விற்பனை செய்யும் வகையிலும் இந்த சந்தைக் கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளதாக மாநகரசபை முதல்வர் தியா கராஜா சரவணபவன் இதன்போது தெரிவித்தார்.

## கிழக்கு கலாசார திணைக்கள புதிய பணிப்பாளர் பதவியேற்பு



(பைல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாண கலாசார திணைக் களத்தின் புதிய மாகாணப் பணிப்பாளராக திருமதி எஸ்.சரண்யா நேற்று முன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண கலாசார திணைக்க ளத்தின் பணிப்பாளராக கடமையாற்றி வந்த எஸ்.நவநீதன் மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் மட்டக் களப்பு மாவட்ட மேலதிக பணிப்பாளராக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் நியமிக்கப்பட்டமையை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு (திருமதி) எஸ்.சரண்யா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், கிழக்கு மாகாண சமூக சேவை கள் திணைக்களத்தின் பதில் உதவிப் பணிப்பாளராகவும், கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளராகவும் கடமையாற்றி வந்த நிலையிலேயே இப்பதவிக்கு நியமிக்கப் பட்டுள்ளார்.

# ஸ்டாலினை விடுதலை செய்யக் கோரி மட்டக்களப்பில் கண்டனப் போராட்டம்







பிரபல தெழிற்சங்கவாதியும் இலங்கை ஆசிரியர் சங்க செயலாளரு மான ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப் பட்டமை வன்மையான கண்டனத் துக்குரியது எனத் தெரிவித்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை மட்டக்களப்பில் கண்டனப் போராட்டம் ஒன்றினை நடத்தினர்.

அரசின் இதுபோன்ற அராஜகங்கள் உடன் நிறுத்தப்படவேண்டும், ஜனநாய கவழிப் போராட்டக்காரரை ஒடுக்கும் செயலை அரசாங்கம் உடன் நிறுத்த வேண்டுமெனக்கோரி இந்தப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில்கலந்துகொண்டிருந்த ஆசிரியர்கள் ஜோசப் ஸ்டலினை விடுதலை செய்யவேண்டும் என்ற கோஷங்களை எழுப்பினர். 'போராட்டக் காரர்களை இரும்புக்கரம் கொண்டு அடக்காதே!', 'ஜோசப் ஸ்டலின் உட்பட அனைத்துப் போராட்டக்காரர்களையும் விடுதலை செய்!', 'சமத்துவ சட்டவாட் சியை நடைமுறைப்படுத்து!', 'ஜன நாயகத்தைக் குழி தோண்டிப் புதைக் காதே!'–போன்றசுலோகங்களையுடைய பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

# சித்தானைக்குட்டி சுவாமியின் 71 ஆவது குருபூஜை நேற்று




சித்தரருள் சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமியின் 71 ஆவது குருபூசை நேற்று வெள்ளிக்கிழமை கிழக்கு மாகாணம் காரைதீவு சித்தர் மடாலயத்தில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

(படங்கள்: காரைதீவு நிருபர் சகா).

# லைக்கா குழும நிறுவனருக்கு 'ஐரோப்பிய தமிழரசன்' விருது!





அகில உலக கம்பன் கழகம், வி.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்கம் ஆகியன சுவிட்ஸர்லாந்தில் இணைந்து நடத்திய திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழாவில், லைக்கா குழுமத்தின் நிறுவுநரும் தலைவருமான சுபாஸ்கரன் அல்லிராஜாவுக்கு 'ஐரோப்பியதமிழரசன்' என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

கடந்த யூலை 31ஆம் திகதி சுவிட்ஸர்லாந்தில் ஸ்ரீ விஷ்ணு துர்க்கை அம்மன் ஆலய வளாகத்தில் அமையப்பெற்ற, திருவள்ளுவர் சிலையை, லைக்கா குழுமத்தின் நிறுவுநரும், தலைவருமான சுபாஸ்கரன் அல்லிராஜா மற்றும் லைக்கா ஹெல்த் தலைவர் திருமதி பிரேமா சுபாஸ்கரன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

இந்த விழாவில், ஸ்ரீ விஷ்ணு துர்க்கா பீடாதிபதியும், அகில உலக கம்பன்கழகத்தின் தலைவருமான சுவாமி சரஹ பவானந்தா, லைக்கா குழுமத்தின் நிறுவுநரும், தலைவருமான சுபாஸ்கரன் அல்லிராஜாவுக்கு, 'ஐரோப்பிய தமிழரசன்' என்ற விருதை வழங்கி கௌரவித்தார்.

அதனைத் தொடர்ந்து, ஸ்ரீ விஷ்ணு துர்க்கா பீடாதிபதியும், அகில உலக கம்பன்கழகத்தின் தலைவருமான சுவாமி சரஹ பவானந்தா, லைக்கா ஹெல்த் தலைவர் திருமதி பிரேமா சுபாஸ்கரனுக்கு 'வாசுகி' என்ற விருதை வழங்கி கௌரவித்தார்.

# கந்தளாய்க் குளத்தில் மூழ்கி இளைஞரொருவர் உயிரிழப்பு

கந்தளாய்க் குளத்திற்கு குளிக்கச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

பாணந்துறை, அம்பலந்துறைப் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய மொஹம்மட் முஸ்னி என்ற 2 பிள்ளைகளின் தந்தையே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமாலை இடம்பெற்றுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தநபர் கந்தளாய்பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தொழில் செய்து வந்த நிலையில் பாணந்துறையில் இருந்து கந்தளாய்க்குச் சுற்றுலா சென்ற நண்பர்களுடன் சேர்ந்து குளிக்கச் சென்ற போதே கந்தளாய்க் குளத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் எனக் கந்தளாய்ப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய்ப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# லயன் மகாதேவா –பூமாதேவி சதுக்கம் தெல்லிப்பழை மகாஜனாவில் அமைப்பு

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் முன்னோடிகளான லயன் மகாதேவா – பூமாதேவி சதுக்கம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு முன்பாக சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் ஒழுங்கமைப்பில் மகாதேவா பிருந்தாவனின் நிதியுதவியில் அமைப்பதற்கு கடந்த வியாழக்கிழமை அடிக்கல் நாட்டப்பட்டது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு முன்பாக போக்குவரத்து நெரிசல் காரணமாக மாணவர்களும் பெற்றோரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.


இதனைக் கருத்திற்கொண்டு சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரும் வலி.வடக்கு பிரதேசசபையினரும் அமரர் லயன் மகாதேவாவின் சிரேஷ்ட புதல்வரிடம், பாடசாலைக்கு முன்னாள் உள்ள வெள்ளவாய்க்காலின் மேல் சீமெந்தினால் பிளாற் உருவாக்கி, பெற்றோர்கள் மாணவர்களை அழைத்துச் செல்வதற்கு இலகுவாக அவர்கள் தமது வாகனங்களுடன் இழைப்பாறுவதற்கு 65 மீற்றர் நீளத்துக்கு நிழற்குடை அமைத்து பஸ் தரிப்பு நிலையம் ஒன்றும் அமைத்து 'லயன் மகாதேவா – பூமாதேவி சதுக்கம்' அமைப்பதற்கான கோரிக்கையை முன்வைத்தனர். அதற்குரிய அனுசரணை வழங்குவதற்கு அவர் ஒப்புதல் வழங்கி நேற்று அதற்குரிய அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்த நிகழ்வில் அனுசரணையாளர் மகாதேவா பிருந்தாவனுடன் வலி.வடக்கு பிரதேசசபை தவிசாளர் சோ.சுகிர்தன், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் க.மணிசேகரன், வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினரும் சுன்னாகம் லயன்ஸ் கழகச் செயலாளருமாகிய லயன் சி.ஹரிகரன், தெல்லிப்பழை துர்க்காபுரம் கிராம உத்தியோகத்தர் இந்திரஜித், சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் க.டினேஸ், வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினரும் சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினருமாகிய லயன் பா.மரியதாஸ் மற்றும் சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர்களான லயன் செல்வராகினி, லயன் சிவகுமார், லயன் விசாலினி, லயன் வசிகரன் ஆகியோர் பங்குகொண்டு அடிக்கல்லை நாட்டிவைத்தனர்.

அமரர்களான லயன் மகாதேவா – பூமாதேவி தம்பதிகளின் நினைவாக சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் அவரது புதல்வர்களால் இருமாடிக் கட்டடம் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# 100 நாள்கள் செயல்முனைவின் 05 ஆவது நாள் மட்டக்களப்பில்






(க.கிருபாகரன்)

வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனும் நூறு நாள்கள் செயல்முனைவின் ஐந்தாம் நாள் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தி லுள்ள காந்தி பூங்காவில் நடைபெற்றது. இப்போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள், சிவில் அமைப்பினர், பெண்கள் அமைப்பினர், செயற்பாட்டாளர் என 150 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனும் கோரிக்கையை வேண்டி நின்றனர். இதன்போது மக்களின் அவல வாழ்வை வெளிக்கொணரும் வகையிலான வீதி நாடகம் அரங்கேற்றப் பட்டது. அத்தோடு இந்நிகழ்வில் கலந்து கொண்டோரால் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று மனித உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டது. இதேவேளை நூறு நாள்கள் செயல்முனைவின் நான்காவது நாள் போராட்டம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.08.2022இல் வெளியிடப்பெற்றது.